**CNR No.TNVL1E-000410-2022**

# சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் திங்கட்க்கிழமை

(2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரைத்திங்கள் 07ம் நாள்)

## அசல் வழக்கு எண்.116/2022

ராஜமாணிக்கம்
த/பெ. தொப்போடன் ... வாதி

/ எதிர் /

ராபியாகவல்
க/பெ. சிராஜ் .... பிரதிவாதி

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 09.04.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சம்பத் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. ரஞ்சித்குமார் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

### தீர்ப்பு

**01)** வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து வரவேண்டிய தாவாத் தொகை ரூ.6,04,950/- ஐ, பின் வட்டியுடன் பெறுவதற்காக, வாதியால் பணத் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02) வழக்குரையின் சுருக்கம்:**

வாதியிடமிருந்து பிரதிவாதி தனது அவசர குடும்பசெலவிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும், கடன் கேட்டுள்ளார். அதன் அடிப்படையில், கடந்த 11.11.2019ம் தேதி ரூ.2,00,000/- பணத்தையும், கடந்த 16.12.2019ம்

தேதி ரூ.1,00,000/–த்தையும், வாணியம்பாடி கிளை, சிண்டிகேட் வங்கியில் பிரதிவாதியின் வங்கி கணக்கில் வாதி செலுத்தியுள்ளார்.

மேலும், கடந்த 04.01.2020ல் ரூ.1,00,000/–த்தையும், கடந்த 28.01.2020ல் ரூ.1,00,000/–த்தையும், பிரதிவாதியின் பெயரில் உள்ள இந்தியன் வங்கி, வாணியம்பாடி கிளை வங்கி கணக்கில், வாதி செலுத்தியுள்ளார். கடந்த 28.01.2020ல், இந்தியன் வங்கி, வாணியம்பாடி கிளையில் உள்ள பிரதிவாதியின் கணவரது வங்கி கணக்கில் ரூ.1,00,000/– வாதி செலுத்தியுள்ளார்.

வாதியிடம் பிரதிவாதி பெற்றுள்ள மேற்படி மொத்த கடன் தொகை ரூ.6,00,000/–த்தை, ரூ.100/–க்கு ரூ.2/– என்ற மாத வட்டி கணக்கில் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ள பிரதிவாதி, கடந்த 26.03.2022ல், ரூ.50/– மதிப்புடைய முத்திரை தாளில், வாதி பெயருக்கு கடனுறுதி சீட்டு ஒன்றை, சாட்சிகள் முன்னிலையில் எழுதிகொடுத்துள்ளார்.

பின்னிட்டு, மேற்படி தொகை எதனையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்தாத காரணத்தினால், கடந்த 22.04.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை, வாதி, பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு, எந்தவொரு பணமும், பதிலும் கொடுக்கவில்லை.

பிரதிவாதிக்கு சொந்தமாக ரூ.30,00,000/– மதிப்பிலான அசையா சொத்துக்கள் உள்ளது. அதன்மூலம் பிரதிவாதி வருடம் ரூ.7,00,000/– வருமானம் பெறுகிறார். கடன் நிவாரண சட்டத்தின்கீழ் பிரதிவாதி எந்த பலனும் பெறமுடியாது. ஆகையால், தாவா தொகை ரூ.6,04,950/–ம், பின்னிட்ட வட்டியையும் பிரதிவாதியிடமிருந்து திரும்ப பெறுவதற்காக வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

வாதியிடம் பிரதிவாதி கடன் கேட்டுள்ளதாகவும், அதற்காக பல்வேறு தேதிகளில், பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவரது வங்கி கணக்குகளில், வாதி பணம் ரூ.6,00,000/-த்தை தனித்தனியாக பிரித்து வைப்பீடு செய்துள்ளதாகவும், வழக்கில் கூறியுள்ளது உண்மை கிடையாது.

கடந்த 26.03.2022ம் தேதி, வாதி பெயருக்கு பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிகொடுத்துள்ளதாக கூறுவது உண்மைக்கு மாறானது ஆகும். மேற்படி கடனுறுதி சீட்டு ஆவணம் எதையும் பிரதிவாதி எழுதிகொடுக்கவில்லை. அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது கிடையாது. மேற்படி ஆவணத்தை, மோசடியாக வாதி தயார் செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 22.04.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை வாதி, பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளது உண்மையாகும். ஆனால், அதில் உள்ள சங்கதிகள் உண்மையானவை கிடையாது.

தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை. வழக்கில் குறிப்பிட்டுள்ள வட்டி விகிதம் தவறானது. வாதியால் வழக்கிற்கான நீதிமன்ற கட்டணம் தவறாக செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால், எந்தவொரு அடிப்படை ஆதாரமும் இன்றி, வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை, ஆகியவற்றை பரிசீலனை செய்தபின், கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே வனையப்பட்டுள்ளன.

(i) தாவா கடன் தொகையை பின் வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்ற தாவா பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

((ii) வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

**05)** வாதி தரப்பில் தாவாவை தாக்கல் செய்துள்ள வாதி ராஜமாணிக்கம் என்பவர் வா.சா.1 ஆகவும், லட்சுமணன் என்பவர் வா.சா.2 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி ராபீயா கவல் என்பவர் பி.சா.1 ஆகவும், சிராஜ் என்பவர் பி.சா.2 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**06)** அசல் வழக்கு விசாரணை இருதரப்பு வாதத்திற்காக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துள்ளபோது, வாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர், வாதியிடமிருந்து எந்தவொரு தகவலும் இல்லை என கூறி, **"Reporting No Instructions"** என இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியுள்ள வாதி, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிள் அடிப்படையில் வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்க தனக்கு ஆட்சேபனை இல்லை என கூறியுள்ளார்.

07) பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் இந்நீதிமன்றத்தால் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>08) எழுவினா 1 – ற்கான தீர்வு :</u>**

பிரதிவாதி தனது அவசர குடும்ப செலவு மற்றும் மருத்துவ செலவுகளுக்காக வாதியிடம் கடன் கேட்டுள்ளதாகவும், அதற்காக பல்வேறு தேதிகளில், பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவரது வங்கி கணக்குகளில், வாதியால் பணம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள கடன் பணம் மொத்தம் ரூ.6,00,000/–த்திற்கு, கடந்த 26.03.2022ல் வாதி பெயருக்கு, பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிகொடுத்துள்ளதகாவும், பின்னர் அதனை திருப்பி செலுத்தாத காரணத்தினால், மேற்படி பணத்தை பின்வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து திரும்ப பெறுவதற்காக வாதி வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்குரை சங்கதிகளை மறுத்துள்ள பிரதிவாதி தரப்பில், வாதியிடமிருந்து பிரதிவாதி எந்தவொரு கடன் பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், வழக்கில் கூறியுள்ளபடி, வாதி பெயருக்கு பிரதிவாதி கடனுறுதி சீட்டு எதனையும், எழுதிகொடுக்கவில்லை என்றும், மேற்படி கடனுறுதி சீட்டு ஆவணம் மோசடியானது எனவும், எதிர்வாதம் செய்யபட்டுள்ளது.

இந்நிலையில், வாதிக்கு, பிரதிவாதி பணம் ரூ.6,00,000/– கடன் கொடுத்துள்ளார் என்ற வழக்கு சங்கதியையும், தாவா கடனுறுதி சீட்டு ஆவணம் உண்மையானது என்பதையும், முதலில் நிரூபிக்கும் சுமை வாதியை சார்ந்துள்ளது.

தாவா சங்கதிகளை எடுத்துரைத்து வாதி ராஜமாணிக்கம் வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். கடந்த 11.11.2019ல் பிரதிவாதி பெயரில் உள்ள சிண்டிகேட் வங்கி, வாணியம்பாடி கிளையில் ரூ.2,00,000/–பணம் வாதியால் வைப்பீடு செய்யபட்டுள்ளதற்கான

வைப்பீட்டு சலானின் கௌண்டர் பைல் வா.சா.ஆ.1 ஆகவும், மேற்படி வங்கியில் கடந்த 16.12.2019ல் ரூ.1,00,000/– பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தியதற்கான வங்கி வைப்பீடு சலானின் கௌண்டர் பைல் வா.சா.ஆ.2 ஆகவும், வாதி தரப்பில் இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ளன.

மேலும், கடந்த 04.01.2020ல் வாணியம்பாடி கிளை, இந்தியன் வங்கியில் உள்ள பிரதிவாதியின் வங்கி கணக்கில் ரூ.1,00,000/– வாதியால் வைப்பீடு செய்யபட்டுள்ளதற்கான வங்கி வைப்பீடு சலானின் கௌண்டர் பைல் வா.சா.ஆ.3 ஆகவும், மேற்படி வங்கியில் கடந்த 28.01.2020ல் பிரதிவாதியின் வங்கி கணக்கில் ரூ.1,00,000/– வைப்பீடு செய்யபட்டதற்கான வங்கி வைப்பீடு சலானின் கௌண்டர் பைல் வா.சா.ஆ.4 ஆகவும், மேற்படி வங்கியில் கடந்த 28.01.2020ல் பிரதிவாதியின் கணவர் சிராஜ் என்பவர் பெயரில்உள்ள வங்கி கணக்கில் ரூ.1,00,000/– வாதியால் வைப்பீடு செய்யபட்டுள்ளதற்கான வங்கி வைப்பீடு சலானின் கௌண்டர் பைல் வா.சா.ஆ.5 ஆகவும், இவ்வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளன.

மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ. 5 ஆவணங்களை வங்கியில் பூர்த்தி செய்து, பணம் செலுத்தியுள்ள வாதியின் மகன் லட்சுமணன் என்பவர் வா.சா.2 ஆக இவ்வழக்கில் வாதி தரப்பில் விசாரணை செய்யபட்டுள்ளார். மேற்படி ஆவணங்களில், பணம் செலுத்தியுள்ளவர் என்ற இடத்தில் அவரது கையெழுத்து உள்ளது கவனிக்கதக்கது ஆகும்.

வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 5 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வங்கி கிளைகளில், பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் எந்தவொரு வங்கி கணக்கும் இல்லை என பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யபட்டுள்ளது. மேற்படி குறிப்பான எதிர்வாதம் எதுவும் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் குறிப்பிடபடவில்லை.

பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தின்படி, வா.சா.ஆ.1 முதல் வாசா.ஆ.5 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வங்கி கிளைகளில், பிரதிவாதிக்கும், அவரது கணவருக்கும் எந்தவொரு வங்கி கணக்கும் இல்லை என கணக்கில் எடுத்துக்கொண்டால், மேற்படி வங்கி கிளைகளில் வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 5 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சலான்களை வங்கி அதிகாரிகள் பெற்றுக்கொண்டு, அதற்கான கௌண்டர் பைல்களை வாதியிடம் திருப்பி கொடுத்திருப்பதற்கு நடைமுறை சாத்தியகூறுகள் இல்லை என்பது உண்மையாகும்.

ஆகையால், வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி, பிரதிவாதியின் வேண்டுகோளின்படி, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ. 5 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள தேதிகளில், பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவரது வங்கி கணக்குகளில், பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.6,00,000/–த்தை வாதியின் சார்பில், அவரது மகன் வா.சா.2 லட்சுமணன் என்பவர் வைப்பீடு செய்துள்ளார் என்ற உண்மையை இந்நீதிமன்றம் கண்டறிந்து கொள்கிறது.

மேற்படி கடன் பணத்திற்கு ஆதரவாக 26.03.2022ல் வாதி பெயருக்கு பிரதிவாதி கடனுறுதி சீட்டு ஒன்றை எழுதிகொடுத்துள்ளதாக வழக்கில் கூறியுள்ள வாதியால், மேற்படி கடனுறுதி சீட்டு ஆவணத்தின் அசல் வா.சா.ஆ. 6 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ளது. வா.சா.ஆ. 6 கடனுறுதி சீட்டு ஆவணத்தில், வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 5 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள தேதிகளில், வாதியிடமிருந்து மொத்தம் ரூ.6,00,000/– கடன் பணத்தை பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது.

வா.சா.ஆ. 6 கடனுறுதி சீட்டு ஆவணத்தில். பிரதிவாதியின் கையெழுத்துகளும், முதலாவது சாட்சியாக பிரதிவாதியின் கணவர் சிராஜ்

என்பவரின் கையெழுத்தும் காணப்படுகிறது. மேற்படி கையெழுத்துக்கள் பிரதிவாதி மற்றும் அவருடைய கணவருடையது கிடையாது என பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யபட்டுள்ளது.

வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள காலகட்டத்தில், பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளபடும் பிரதிவாதி மற்றும் அவரது கணவருடைய கையெழுத்துகள் அடங்கிய ஆவணங்கள் எதையும், பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

இந்நிலையில், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 73ன்படி, பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளபட்டுள்ள இவ்வழக்கின் எதிர்வழக்குரையில் காணப்படும் பிரதிவாதியின் கையெழுத்தையும், பி.சா.2 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ள சாட்சியத்தில் கண்டுள்ள பிரதிவாதியின் கணவர் சிராஜ் என்பவரின் கையெழுத்துகளையும், இந்நீதிமன்றம் வா.சா.ஆ. 6 ஆவணத்தில் உள்ள கையெழுத்துகளுடன் மிகுந்த கவனத்துடன் ஒப்பீடு செய்து பார்க்கையில், அவைகள் எந்தவொரு மாறுபாடுமின்றி ஒன்றுபோல் உள்ளது என்ற உண்மையை கண்டறிந்து கொள்ளமுடிகிறது.

வழக்கிற்கு முன் வாதியால், கடந்த 22.04.2022 தேதியிட்ட வா.சா.ஆ. 7 வழக்கறிஞர் அறிவிப்பு, பிரதிவாதிக்கு கொடுக்கபட்டுள்ளது. அதனை வா.சா.ஆ. 8 அஞ்சல் ஒப்புதல் அட்டை மூலம் பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார். வா.சா.ஆ. 7 அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்து, பிரதிவாதியால் எந்தவொரு பதில் அறிவிப்பும் வாதிக்கு கொடுக்கபடவில்லை என்பது குறிப்பிடதக்கது ஆகும்.

வா.சா.ஆ. 6 கடனுறுதி சீட்டு ஆவணம். வாதியா'ல மோசடியாக வழக்கிற்காக உருவாக்கபட்டுள்ள ஆவணம் என எதிர்வழக்காடியுள்ள பிரதிவாதி தரப்பில், மேற்படி மோசடி தொடர்பாக, வாதிக்கு எதிராக இதுநாள்வரையில் சட்டபடியாக எந்தவொரு நடவடிக்கையும்

எடுக்கபடவில்லை என்ற சங்கதி, பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தில் உள்ள பலவீனத்தை காட்டுவதாக அமைந்துள்ளது.

எனவே, மேற்கண்டவாறு இந்நீதிமன்றத்தால் விவரிக்கபட்டுள்ள காரணங்களினால், வாதியிடமிருந்து ரூ.6,00,000 கடன் பணத்தை, பிரதிவாதி பெற்றுள்ளார் என்பதையும், அதற்கு ஆதரவாக வா.சா.ஆ. 6 தாவா கடனுறுதி சீட்டு ஆவணத்தை, வாதி பெயருக்கு பிரதிவாதி எழுதிகொடுத்துள்ளார் என்பதையும், வாதி இவ்வழக்கில் தகுந்த சாட்சி, சான்றாவணங்கள் மூலம் நிரூப்பித்துள்ள காரணத்தினால், தாவா பரிகாரம் சட்டப்படியாக வாதிக்கு கிடைக்கக்கூடியது என முடிவு செய்யபட்டு, எழுவினா 1 இந்நீதிமன்றத்தால் வாதிக்கு ஆதரவாக விடைகாணப்படுகிறது.

<u>08) எழுவினா 2–ற்க்கான தீர்வு</u>

தாவா பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்க கூடியது என்று மேற்கண்ட எழுவினாவில் இந்நீதிமன்றம் ஏற்கனவே முடிவு கண்டுள்ள நிலையில், தாவாவில் வாதிக்கு ஏற்பட்டுள்ள செலவினஙகள் அனைத்தையும் பிரதிவாதியிடமிருந்து வாதி திரும்ப பெற்றுக்கொள்ளமுடியும் என்றும், தாவாவில் வாதி வேறு எந்தப் பரிகாரமும் பெறமுடியாது என்றும் முடிவு செய்யப்பட்டு, எழுவினா –2 இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**08)** முடிவில், தாவாத் தொகை ரூ.6,04,950/–யும், அசல் தொகை ரூ.6,00,000/–த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை, ஆண்டுக்கு 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின் முழுத் தொகை வசூலாகும் வரை ஆண்டுக்கு 9% வட்டியும், தாவாவில் வாதிக்கு ஏற்பட்டுள்ள செலவுத் தொகைகள் அனைத்தையும், பிரதிவாதி கொடுக்க வேண்டுமென தாவா அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.20 17:24:03 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :–</u>**

வா.சா.1 – ராஜமாணிக்கம்

வா.சா.2 – லட்சுமணன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.11.2019 | வாணியம்பாடி, சிண்டிகேட் வங்கி கிளைக்கான வங்கி வைப்பீடு சலான் கௌண்டர் பைல் |
| வா.சா.ஆ.2 | 16.12.2019 | வாணியம்பாடி, சிண்டிகேட் வங்கி கிளைக்கான வங்கி வைப்பீடு சலான் கௌண்டர் பைல் |
| வா.சா.ஆ.3 | 04.01.2020 | வாணியம்பாடி, இந்தியன் வங்கி கிளைக்கான வங்கி வைப்பீடு சலான் கௌண்டர் பைல் |
| வா.சா.ஆ.4 | 28.01.2020 | வாணியம்பாடி, இந்தியன் வங்கி கிளைக்கான வங்கி வைப்பீடு சலான் கௌண்டர் பைல் |
| வா.சா.ஆ.5 | 28.01.2020 | வாணியம்பாடி, இந்தியன் வங்கி கிளைக்கான வங்கி வைப்பீடு சலான் கௌண்டர் பைல் |
| வா.சா.ஆ.6 | 26.03.2022 | அசல் கடனுறுதி சீட்டு |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 22.04.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.8 | 23.04.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.9 | -- | வில்லங்க சான்று நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :-</u>**

பி.சா.1 – ராபியாகவல்

பி.சா.2 – சிராஜ்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

இல்லை.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.20 17:24:09 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.